Registered aS a Newespaper

விலை ரூபா 1-50

# நம்நாடு

THE NAMNAADU NATIONAL TAMIL DAILY

நாடு—1 சுன்னகம், நவம்பர் மாதம் 12-11-1988 சனிக்கிழமை இதழ் 10

## ஆர்ப்பாட்ட ஊர்வலம்மீது தாக்குதல்! 15 பேர் பலியானூர்கள்

(கொழும்பு)

தொடர்ந்து நடைபெற்று வரும் அரசஎதிர்ப்புஆர்ப்பாட்டங்களில் 15 பேர் சுட்டுக் கொல்லப் பட்டனர் என்று இலங்கைவானொலி அறிவித்துள்ளது. இதற்கிடையில் பிரதமர் திரு. ஆர்.பிரேமதாசா' திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா ஆகிய இருவரதும் ஜனாதிபதித் தேர்தல் வேட்புமனுக்கள் உத்தியோக பூர்வமாகத் தாக்கல் செய்யப் பட்டுள்ளன என்றும் அந்தவானொலி அறிக்கை தெரிவிக்கிறது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்திய இரண்டாயிரம் பேரடங்கிய மக்கள் கூட்டத்தின் மீது பாதுகாப்புப் படை துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததில் பலர் காயமடைந்தனரென்றும், சிலர்கொல்லப் பட்டனரென்றும் வானொலிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சோவியத்தலைவர் பாரத விஜயம்!

# இந்தியப் பிரதமருடன் முக்கிய பேச்சுவார்த்தை

**சோவியத்தலைவரின் இரண்டாவது பாரத விஜயம் இது வென்பது குறிப்பிடத் தக்கதாகும். இதற்கு முன்னர் 1986ஆம்ஆண்டு அவர் பாரதத்திற்கு வருகை தந்திருந்தார்.**

(புதுடில்லி)

சோவியத்தலைவர் மிகால் கோப்பச்சேவ் எதிர்வரும் 18ம் தேதிமுதல் மூன்று நாள்கள் இந்தியாவில் உத்தியோக பூர்வசுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அவருடன் சோவியத் நாட்டின் துணைப்பிரதமமந்திரி, மற்றும் முக்கிய அதிகாரிகள் குழுவினரும் விஜயஞ் செய்கின்றனர். இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியுடன் சோவியத்தலைவர் நான்கு சுற்றுப் பேச்சுக்களை நடத்தவுள்ளார் பல்வேறு முக்கியமான நிகழ்ச்சிகளில் சோவியத்தலைவரும் குழுவினரும் கலந்துகொள்ளவுள்ளனர். சோவியத்–பாரத கலாச்சார விழாக்களின் ஓராண்டுப் பூர்த்திவைபவங்கள் இவற்றில் முக்கிய இடம் பெறுகின்றன.

பாரதப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி சோவியத் தலைவர் மிகால் கோப்பச்சேவுக்கு உத்தியோக பூர்வமான இரவு விருந்தொன்றும் அளிப்பார். அதனைத்தொடர்ந்து பரஸ்பரம் இருநாடுகளினதும் முக்கிய பிரச்சனைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றி இருதலைவர்களிடையேயும்பேச்சுவார்த்தை நடைபெறும்.

இந்திய ஜனாதிபதி திரு.ஆர், வெங்கட்ராமன் துணை ஜனாதிபதி திரு. சங்கர் தயாள் சர்மா ஆகியோரையும் சோவியத் தலைவரும் குழுவினரும் உத்தியோக பூர்வமாகச் சென்று சந்திப்பர்.

இச் சந்திப் புக்களையடுத்து இரு நாடுகளுக்கு மிடையேயான முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்!

## விரைவில் நம்நாடு தினசரி!

''நம்நாடு தனித்துவமானபாணியில்,நடுநிலை நின்றுபத்திரிகைப்பணி புரிகின்றது. அது பெரிய அளவில் இல்லா விட்டாலும், பதினசரி வெளிவரவேண்டும். ஏனெனில் மக்கள் அதன்வருகையைஆவலோடு எதிர் நோக்கி உள்ளனர்,,இவ்வாறு கருத்துதெரிவித்து ஏராளமான கடிதங்கள் நமக்கு வந்து குவிந்துள்ளன.பல நேயர்கள் அலுவலகத்திற்கு நேர் முகமாக வந்தும் இந்தக்கருத்தை வலியுறுத்திச் செல்கின்றனர். இலக்கிய நயமுள்ள, விமர்சனப்பாங்குள்ள வார இதழ் வேண்டுமானால் அதற்கெனத் தனியாக ஒரு பத்திரிகையை வெளியிடுங்கள். நம்நாடு தினசரியாக மலர்ந்தேயாக வேண்டும் என்று அவர்கள் விடாப்பிடியாக வற்புறுத்துகின்றன.

எமக்குக் கூட இந்த வேண்டு கோள்களும், அவற்றில் அடங்கியுள்ளதால் பரியமும் புரியாமலில்லை. எமது சக்திக்கு அப்பாற்பட்ட பொருளாதாரக்காரணிகளும், வசதியினங்களுமே எம்மை இத்தருணத்தில் இடர்ப்படுகின்றன.

வாசக நேயர்கள், விற்பனையாளர்களான பெருமக்கள், ஆதரவாளர்கள் துணிந்து முன் வந்து தினசரியாக நம்நாடு வர வேண்டும் என்றால் நாம் மறுப்பதற்கில்லை. எப்படியும் அதனை நிறைவேற்றவே செய்வோம்.மிக விரைவில் நம்நாடுதினசரியாக வந்தே தீரும் என்ற உண்மையை மட்டும் மீண்டும் உறுதியாக கூறுகிறோம்!

நிர்வாகி
நம்நாடு

## மாணவர்கள் ஊர்வலம் ஆசிரியர்களுக்காக!

(கிளிநொச்சி நிருபர்)
தி. கௌரி

கிளிநொச்சி நகரப் பகுதியில் பாடசாலை மாணவர்களின் எதிர்பார்ப்பு ஊர்வலங்கள் நடைபெற்றது.

ஆசிரியர்களின் திடீர் இட மாற்றங்களை நிறுத்தக் கோரியே இந்த மாணவர் ஊர்வலங்கள் நகர பிரதான வீதியூடாக கல்விப்பணிப்பாளர் பணிமனையை நோக்கி சென்றது.

இப்பகுதியில் உள்ள சில பாடசாலைகளின் ஆசிரியர்கள் பரீட்சை நெருங்குகின்ற இவ்வேளை திடீரென திட்டமில்லாதபடி இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் இதனால் தமது கல்வி பாதிப்படைந்துள்ளதாகவும் இது ஒரு பழிவேண்டும் நடவடிக்கை எனவும் ஊர்வலம் சென்ற மாணவர்களின் பிரதிநிதிகள் நம்நாடு செய்தி நிருபரிடம் தெரிவித்தனர்.

இது இவ்வாறு இருக்க கிளிநொச்சி நகர கனிஷ்ட மகா

(4 ஆம் பக்கம் பார்க்கவும்)

## முதலமைச்சர் இல்லம் தீமூட்டி எரிப்பு

(கொழும்பு)

தென்மா நில முதலமைச்சர் இல்லம் தீவைத்து எரிக்கப்பட்டது. பெருந்தொகையான மக்கள் ஆவேசத்துடன் திரண்டுவந்து தென்மாநில முதல்வரின் வீட்டுக்கு தீ வைத்து எரித்தனர் என்று பி.பி.ஸி வானொலி அறிக்கை தெரிவிக்கின்றது.

## தமிழ், சிங்களம் சமஅந்தஸ்து?

(கொழும்பு)

'சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாக இருத்தல் வேண்டும். ஆங்கிலமும் தேசிய மொழியாக இருத்தல் வேண்டும். தமிழருக்கு என்று தனியான, மாகாணப் பிரிவும், முஸ்லிம்களுக்கென்று தனியான மாகாணப்பிரிவும் உருவாக்கப் படவேண்டும்''

இவ்வாறு இனப்பிரச்சனைக்கான தீர்வினை எதிர்க்கட்சிகளின் பொது முன்னனி முன்வைத்துள்ளது. இதனை முன்னணியின் பேச்சாளரும், தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. குமார் பொன்னம்பலம் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்து உரை நிகழ்த்தினர்.

''அரச ஆதரவுடனான குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்படமாட்டாவென்றும், காணிப் பங்கீடு அவ்வப் பிராந்தியத்திலுள்ள மக்களின் தேவைக்கேற்ப வழங்கப்படும். மத்திய அரசின் பொறுப்பிலுள்ள அதிகாரங்கள் வரையறை செய்யப்படும்' பிரசாவுரிமை, சட்டம் ஒழுங்கு, மக்கள் பிரதிநிதித்துவம் என்பன மிகத் தெளிவான வரையறைகளுடன் பின்பற்றப்படும் என்றும் அவர் இந்த மாநாட்டில் எடுத்துக் கூறினர். எதிர்க்கட்சிகளின் பொது முன்னனி எடுத்துள்ள பல விடயங்கள் விபரமாக எடுத்துக் கூறப்பட்டது!

## ஜனாதிபதி சொல்கிறார்;

# பாராளுமன்றம் கலைக்கப்படும்

(கொழும்பு)

ஜே.வி.பி.யினர் தமது வன்முறைப் போராட்டங்களைக் கைவிட்டால், தாம் பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து விடுவதற்குத் தயாராகவுள்ளதாக ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தெரிவித்துள்ளதாக பி.பி.ஸி வானொலிச் செய்தி இன்று தெரிவித்தது.

ஜே;வி'பியினர் பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை தமது போராட்டங்கள் ஓயப்போவதில்லையென அறிவித்துள்ளனராம். நிமிடத்துக்கு நிமிடம் தென்மாகாணங்களில் வன் செயல்கள் கூடி வருவதாகவும், அவற்றைக் கட்டுப்படுத்தப் பாதுகாப்புப் படைகள் தீவிர முயற்சி செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் இன்றைய பத்திரிகை நம்நாடு

சிறுகதை

# மயக்கம்!

'நான்ஜி'

அவன் மறைந்து சிலமணித்தியாலங்கள் தான் சென்றன. அவன் மனைவி அழுதாள். அவனது உயிரற்ற உடலை அணைத்துக்கொண்டே அரற்றினாள் வெறித்தனமாக அவன் முகத்தில், கன்னத்தில், கரங்களில் முத்தமிட்டாள். மயங்கினாள். என்ன செய்தும் அவன் பிழைக்கப் போவதில்லையே! உற்றார், உறவினர், நண்பர்கள், புடை சூழ இறுதி ஊர்வலம் சேமக்காலைக்கு சென்றது. அவனது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டதும், அனைவரும் துக்கம் தோய்ந்த முகங்களுடன் தத்தம் இல்லம் ஏகினர்.

அவளுக்கு நித்திரையே வரவில்லை. படுக்கையில் புரண்டாள். உருண்டாள். ஏதோ நினைத்துக் கொண்டவள் போலத் திடீரென எழுந்து உட்கார்ந்தாள். தான் போட்டிருந்த இரவு அங்கியுடனேயே கையில் ஒரு விசிறியையும், டார்ச்லைட் ஒன்றையும் எடுத்துக் கொண்டு ஓடினாள் அடக்கத் தலத்தை நோக்கி.

நேரம் நள்ளிரவு. பன்னிரண்டு மணி. குளிர்ந்த காற்றுக்கூட அவளின் உஷ்ணமான சுவாசத்தின் தகிப்பைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. அவனுடைய கல்லறை அவசரம் அவசரமாகக் கட்டப்பட்டது. அதன் ஈரத்தன்மை இன்னும் மாறவே இல்லை. அவள்—அவன் மனைவி கல்லறையைச் சுற்றிச் சுற்றி வந்து தான் கொண்டுவந்த விசிறியினால் விசிக் கொண்டே இருந்தாள். அவளைத் தேடி, ஓடிவந்தவர்கள் தமக்குள் விம்மிக் கொண்டனர். இவளல்லவோ, உத்தமி, கற்புக்கரசி, பெண் தெய்வம் என்று சிலாகித்தனர்.

கொஞ்சம் மனத்துணிவுள்ள ஒரு இளைஞன் முன்னுக்கு வந்து அவளை அணைத்தபடியே ஆறுதல் சொல்லும் பாணியில் கேட்டான். 'நியதி' அப்படியாகி விட்டது. உங்கள் கணவர் இறந்து விட்டார். இனி அவர் உயிர் பெற்று எழப் போவதில்லை. அவரின் மேல் நீங்கள் கொண்டிருந்த அற்புதமான காதலை நாங்கள் அறிவோம். அதற்காக நள்ளிரவில், தனிமையில், பயங்கரமான சூழ்நிலையிலுள்ள மயானத்திற்கு ஓடிவந்து, அவரது கல்லறைக்கு விசிறி கொண்டு விசிடவா வேண்டும்...? உங்களை நினைக்க எங்களுக்கு மனம் பதைக்கிறது...!

அவன் சொல்லி முடிக்கவில்லை. அவள் ஓவென்று கதறினாள்! கோபமாக அந்த இளைஞனை பார்த்தாள். பின்பு வேகமாக இப்படிப் பேசினாள்.

உமக்கு உண்மை தெரியாது. எனது கணவன் உயிருடன் இருந்த போது இப்படி சொல்லியிருந்தார். ''நான் இறந்து எனது சவ அடக்கம் முடிந்து, எனது கல்லறையின் ஈரம் காய்வதற்குள்ளாக நீ மறு மணம் செய்யக்கூடாது...!,, ஆம் நான் அவர் வார்த்தையை மீறப் போவதில்லை. இந்தக் கல்லறையின் ஈரம் காய்வதற்கு அதிக நேரம் எடுக்கும். விரைவில் அது உலர்ந்துவிட்டால் எனது கணவனின் வார்த்தைப்படியே, எனது புதிய காதலனைக் கைப்பிடிக்கலாம். அதற்காகவே தான் இந்த விசிறிகொண்டு விசிக் கல்லறையின் ஈரத்தைக் காய வைக்கிறேன்....

பாவம் அந்த இளைஞனும் மயங்கிச் சரிந்தான்.

## பிரதமர் ராஜீவ் காந்திக்கு வல்வெட்டித்துறை மக்கள் மகஜர்

வல்வெட்டித்துறை

பாரதப் பிரதமர் திரு ராஜீவ்காந்திக்கு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 225 பேர் கையொப்பமிட்டு அளிக்கப் பட்ட மகஜர் ஒன்று, உடுப்பிட்டி பாதுகாப்புப் படை பொறுப்பதிகாரி மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை நடாத்தப்பட்ட தேடுதலின் போது வல்வெட்டித்துறை சுற்றிவளைக்கப்பட்டது'' பலர் கைது செய்யப்பட்டனர்

கைது செய்யப் பட்டோரை விடுவிக்கக் கோரி மக்கள் பேரணி ஒன்று நடாத்தப் பட்டது பேரணியில் கலந்து கொண்டவர்கள் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரும் சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர். இப் பேரணியினரின் பிரதிநிதிகளை உடுப்பிட்டி பாதுகாப்புப் படை முகாம் பொறுப்பதிகாரி முகாமிற்குள் அழைத்துப் பேசினார். ஒருமணி நேரம் இப் பேச்சு வார்த்தை நடந்ததாம். அப்போதே மேற்கண்ட மகஜர் முகாம் பொறுப்பதிகாரி மூலம் பாரதப் பிரதமருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது எனத் தெரிய வருகிறது.

விளம்பரதாரர்களே

நம்நாடு

வரிவிளம்பரங்கள்
வர்த்தக விளம்பரங்கள்
யாவும் மிகக் குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்கும்
சகல விளம்பரதாரர் களும்
சந்தர்ப்பத்தைத்
தவறவிடாது
பயன்படுத்துக.
குறைந்த கட்டணம்,
நிறைந்த சேவை

நம்நாடு
192, கே. கே. எஸ் வீதி
சுன்னாகம்.

ஏழு கட்சிஅணியிலிருந்து;

## கலைஞர் கருணாநிதி வெளியேறுவார்

(சென்னை)

என்றுமில்லாதவாறு தேசிய நீரோட்டத்தில் சேரப்போவதாக அறிவித்த கலைஞர், ஏழுகட்சிகளான ஜனதா, லோக்தள, ஜனமோர்ச்சா, காங்கிரஸ்(எஸ்), தெலுங்குதேசம் அஸாம் கணபரிசத், தி.மு.க என்ற கூட்டணியிலிருந்துமிகவிரைவில் வெளியேறிவிடுவார் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர். தி.மு.க.வுக்கு தமிழ்நாட்டில் உள்ள செல்வாக்கு, இக் கூட்டணி அமைப்பின் மூலம் எதிர்பார்த்த அளவுக்குஅதிகரிக்கவில்லை என்பதுடன், கட்சிப் பிரமுகர்களிடையேயும் பலத்தகருத்து வேறுபாடுகளைத் தோற்றுவித்துள்ளதாம். உட்கட்சிப் பூசல்கள் படிப்படியாகத்தி.மு.கவுக்குள்ளும்உருவாகிவருகிறதாம். கலைஞர் மு.கவின்புதல்வர் ஸ்டாலின் இளைஞர் அணித்தலைவராக வராகச் செயற்படுவதனை மூத்ததலைவர்கள் வேண்டா வெறுப்பாகச்சகித்துக் கொண்டுள்ளனராம். அத்துடன்மொழிக்கொள்கையில் நேரத்துக்கு நேரம் மாறுபடும் ஏனைய ஆறு கட்சிகளின் போக்கிலும்அவர்கள் அதிருப்தி கொண்டுள்ளனராம். இதனால் மும்மொழி கொள்கை முன்வைப்பைச் சாடிவிட்டுதி.மு.க தலைவர் கலைஞர்கருணாநிதி ஏழுகட்சிகூட்டமைப்பை உடைத்து விட்டுவெளியேறுவார் என்பது நிச்சயமாகிவருகிறதாம்.

### முக்கிய அறிவித்தல்

தீபாவளி விடுமுறை காரணமாக 'நம்நாடு' இந்த இதழ் 12-11-88 சனிக்கிழமை வெளி வருகிறது!

சிறந்த அச்சுவேலைக்கு

★ புத்தகங்கள்
★ ஆண்டுமலர்கள்
★ நினைவுமலர்கள்
★ பாடநூல்கள்
★ மற்றும்சகலவகையான அச்சுவேலைகளுக்கும் உகந்த இடம்

நம்நாடு அச்சகம்
192 கே.கே.எஸ். வீதி
சுன்னாகம்,

## எழுத்தாளர்களுக்கு!

நம்நாடு வார இதழ் தரமான அரசியல், இலக்கிய, ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், சிறுகதை, தொடர்கதை, கவிதை என்பவற்றையும் வாரம் தோறும்தருகிறது. எழுத்தாளர்கள் தங்கள் ஆக்கங்களை அனுப்பித்தருமாறு வேண்டுகிறோம்

தரமான எந்த ஆக்கமும் நிச்சயமாகப் பிரசுரம் பெறும் பிரபலஎழுத்தாளர்கள், மூத்த எழுத்தாளர்கள், அறிமுக எழுத்தாளர்கள் என்றபேதம் பாராது, விடயத்தின் தகுதி கண்டுபிரசுரத்தில் முன்னிடம் அளிப்போம். எழுத்தாளர்களே உங்கள் பங்களிப்பை நம்நாடு உற்சாகத்துடன் வரவேற்கின்றது எங்கே எழுதுங்கள் பார்க்கலாம்!

ஆசிரியர்

## வடக்கு - கிழக்கில் நிஸ்கோ, 'சுயதொழில் கடனுதவித் திட்டம்'

(யாழ்ப்பாணம்)

தேசிய சேவை இளைஞர் மன்றத்தின் ஓர் ஸ்தாபனமான 'நிஸ்கோ' பிரதேச இளைஞர்களதும், யுவதிகளினதும் முன்னேற்றத்தைக் கருதி சுயதொழில் கடனுதவித் திட்டமொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது. இதன்கீழ் கால்நடை வளர்ப்பு, உப உணவு, பயிர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், நெற்செய்கை, சுய உணவுப் பயிர்ச்செய்கை, பண்ணை வளர்ப்பு, மரக்கறிச் செய்கை, மிருக பரிபாலனம், குடிசைக் கைத்தொழில், சிறிய அளவிலான கைத்தொழில் முயற்சிகள், வர்த்தகம், இயந்திராதிகள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் திருத்துதல் ஆகிய சுய தொழிலுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இதற்காக 15 ஆயிரம் ரூபாவிலிருந்து 20 ஆயிரம் ரூபாவரை கடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குழுக்களுக்கு 50ஆயிரம் ரூபாவும் 16 வீதம் குறைந்த வட்டியுடன் 1 வருட கடன் கழிவு காலத்துடன் வழங்கப் படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா திருகோணமலை, அம்பாறை ஆகிய வடக்கு கிழக்கு மாவட்டங்களில் நிஸ்கோ இளைஞர் கூட்டுறவு ஊடாக பிரதேசத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களைப் பயன்படுத்தி சுய தொழில்களை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுயதொழில்களை மேலும் விரிவுபடுத்த முயலும் இளைஞர், யுவதிகளுக்கும் இக்கடனுதவித் திட்டம் உதவி புரியும்.

பிரதேச இளைஞர், யுவதிகள் தத்தமது 'நிஸ்கோ' மாவட்ட முகாமையாளருடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்,

தமிழ் நாட்டில்

## பிரதமர் திரு. ராஜிவ்காந்தி

(சென்னை)

பாரதப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி மீண்டும் தமிழ் நாட்டுக்கு 3 நாள் விஜயம் செய்துள்ளார். இவ் விஜயத்தின் போது அவர் பல பேரணிக் கூட்டங்களிலும், தொழிலாளர் கூட்டங்களிலும் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார். மகளிர் கல்லூரி ஒன்றுக்கான அடிக்கல் நாட்டுவார். பல கிராமங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

## புதிய அமெரிக்க ஜனாதிபதி

(வாசிங்டன்)

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக திரு. ஜோர்ஜ் புஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதாவது பரிபாலனத்தின் கீழ் அமெரிக்க சோவியத் நட்புறவு விருத்தியடையும் எனத் தாம் நம்புவதாக சோவியத் தலைவர் திரு. கோபர்ச்சேவ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## போக்குவரத்து ஸ்தம்பிதம்!

(கொழும்பு)

ஜே. வி. பியினர்அமுல் செய்த ஹர்த்தாலைத்தொடர்ந்து நாடு முழுவதும் பரவலாகப் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளதாம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓரளவு பிரயாண வசதிகள் இருப்பினும் ஏனைய ஏழு மாகாணங்களிலும் போக்குவரத்துத் தடைகள் முழுமையாகவுள்ளன. என்று தெரியவருகிறது. பெற்றோல், டீசல் மற்றும் எரிபொருள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் இதனால் பெரிதும்பாதிக்கப் பட்டுள்ளனர்,

மணிமொழி

"பொய்மையும் வாய்மை இடத்த
புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்!"
—திருவள்ளுவர்

# நமது சிந்தனை

## மகாத்மா ஒருவரே

மகாத்மா காந்தியடிகள் அமரராகி நாற்பது ஆண்டு களாகி விட்டன. ஆண்டுதோறும் அவர் பிறந்த தினத்தை யும், அமரரான தினத்தையும் இந்தியாவும், ஏனைய நாடு களின் மக்களும் கொண்டாடி வருகிறார்கள். ஆனால் அண் ணல் காந்தியடிகளார் போதித்த, சாதித்த கொள் கைகளின் அடிப்படையில் காந்தீயத்தின் வெளிச்சத்தில் தத்தம் நாட்டை முன்னேற்றுவார் எவரையுமே இன்று காண முடியாதுள்ளது. காரணம் என்ன?

ஒரு நூற்றாண்டுக்குமுன் என்று கருதவேண்டிய கால கட்டத்தில் இங்கிலாந்தில் படித்து ,பாரிஸ்டர்' பட்டம் பெற் றவர் காந்தியடிகளார். இன்று வேலைதேடி மேலைநாடுகளுக்கு ஓடும் அகதிக் கும்பலைப் போலல்லாமல் உயர்கல்வியைப் பெறவே இங்கிலாந்து சென்று கற்றுப் பட்டம் பெற்றவர் அவர்.

பாரிஸ்டராக இந்தியாவந்து அங்கிருந்து தென்னாபிரிக்கா சென்று தமதுபுதிய அரசியல் அலைகளைஅறிமுகமாக .உலக அரங்கில் காந்தீயத்துவத்தை உருவாக்கியவர் அவர்.அகிம் சையின் அரசியல் ஞானபிதாவும், நடைமுறைச் சாதகரும் அவரே. அந்த அரசியல்அகிம்சைத் தத்துவத்தின் மூலம் சூரியனேஅஸ்தமிக்காத சாம்ராஜ்யம்' என்றுசொல்லப்பட்ட பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தை நடுநடுங்க வைத்து, இந்திய துணைக் கண்டத்திற்கு விடுதலை பெற்றுத்தந்தவர் தேசபிதா அண்ணல் காந்தியடிகளார்.

அவரது வாழ்க்கை, அரசியல், ஒழுக்கமுறை மிகவும் அற்புதமானது. பிரிட்டனில் படித்து ,பாரிஸ்டர் பட்டம் பெற்ற அவர் 'அரை நிர்வாணப் பக்கிரியாக' மாறியதே மகாத்மாவாக அவனர மாற்றியது. இந்தியாவின் பிரதிநிதி யாக பேச்சுவார்த்தைக்கு லண்டன் சென்ற காந்திய டிகள் அரையில் நாலுமுழத் துண்டுடன் சென்றார். இந்திய நாகரிகத்தை 'அந்நிய நாகரிகங்கள் கபளீகரம் செய்ய அனுமதிக்க மாட்டேன்' என்று சங்கநாதஞ் செய்தார். எனது நாட்டின் கோடானுகோடி மக்கள் உடுத்தும் அரைத்துண்டு தான் எனது உடையும் நான் அவர்களின் பிரதிநிதியே தவிர, பிரிட்டிஸ் எஜமானர்களினதும் அவர்க ளது பாதந்தாங்கிகளதும் பிரதிநிதியல்ல என்று பிரிட்ட னிலேயே அறை கூவல் விடுத்தார். பிரிட்டிஸ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் என்மீது அன்பு கூர்ந்து எனது உடை யான அரைத்துண்டுக்கு உலகெங்கும், இலவசமாக அற்புத மான விளம்பரந் தேடித் தந்துள்ளார் என்று நகைச்சுவை யாகக் கூறினர்.

இவ்வளவுக்கு மகாத்மாஜீயின் ஆடையணியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது தமிழ்நாடே. தமிழ் நாட்டின் விவசாயப் பெருங்குடி மக்களே. அரசியல் சுற்றுலாவில் தமிழ கம் வந்த அண்ணல் காந்தியடிகளார் மதுரையில் நடந்த மாபெருங் கூட்டத்தில், தாம் இதுவரை அணிந்து வந்த நாகரிக உடைகளைக் களைந்து, தமிழ்நாட்டு விவசாயியைப் போல, அரையில் நான்கு முழத்துண்டே அணியப் போவதாக எடுத்துரைத்தார். மறுநாள் அவ்வாறு செய்தே விட்டார். அந்த உடையுடன்தான் பிரிட்டிஸ்அரசாங்கத்தை சந்திக்க இங்கிலாந்துக்கும் சென்றார். இந்திய நடை, உடை நாகரிகத்தைக் கேலி செய்தவர்கள் 'வாய்மூடி மௌனஞ் சாதிக்க, தர்க்கரீதியாக விளக்கம் கொடுத்தார்.

காந்தியடிகளார் நாட்டின் விடுதலையைப் பெற்றுக் கொடுத்த போதும் எந்த ஒரு பதவியையும் வகித்ததே கிடையாது. வகிக்கவிரும்பியதே இல்லை. அரசியலில் தனது பரம்பரையை காலூன்றச் செய்யக் கனவு கண்டதே இல்லை.

நாட்டுக்கு எவ்வளவு சுதந்திரமோ, அப்படியே வீட்டு வாழ்க்கையிலும் சுதந்திரங்கண்டார். தமது மனைவியார் அன்னை கஸ்தூரிபாவை 'தெய்வம் போன்றே,வழிபட்டார். தேசத்தொண்டில் பங்கெடுக்கச் செய்தார். சத்தியத்தைப் பேணுவதில் மட்டும் உத்தமர் காந்தியடிகள் மிக உறுதியாக நின்றார்.

பரம்பரைவாணிகச் செழிப்பில் ஊறிய குஜராத்திய இனத்தில் பிறந்தும், தேசத்தினதும், உலகத்தினதும் சேமத் திற்காகத் தன்னை அர்ப்பணித்த காந்தியடிகளாரின் திருநாமம் ஆயிரமாயிரம் ஆண்டுகள் இந்த அவனியில் நிலைக்கும்!

ஸ்ரீ இராமபிரானைப் போல, அரிச்சந்திரனைப் போல, சத்தியத்தை வழிபட்ட உத்தமர் காந்தியடிகளாரின்

வழிகாட்டுதலை உலக நாடுகளின் அரசியல் தலைவர்கள்பின் பற்றினலே தான் உண்மையான சுதந்திரமும்' சமாதானமும் நிலைக்கும்!

உலகிற்கு மகாத்மா ஒருவரே என்பதனை அவரது சத் திய சோதனை வாழ்வு நிரூபித்து விட்டது. மகாத்மா காந்தியின் தத்துவங்கள் உதயசூரியனைப் போல என்றும் இள மையுடன் பிரகாசிக்கும். எந்த இசங்களாலும் அதனைத் தோற்கடிக்க முடியாது. ஏனெனில் மனித சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணிப்பது எப்படி என்பதனைக் காந்தியடிகளார் வாழ்ந்து காட்டியுள்ளார்.

இன்று சுதந்திரம், விடுதலை, சமத்துவம், சனநாயகம் என்றெல்லாம் போராடும் தலைவர்களும், பொது நல சேவ கர்களும் மகாத்மாஜியின் இந்த முன்மாதிரியைப் பின்பற்று வார்களாக?.

## நாடி வந்துவிடும் நம்நாடு

ஐப்பசித் திங்களிலே அற்புதச் சிறப்போடு
எம்பசி தீர்க்கவென வந்துதித்ததோர் ஏடு..!
நற்றமிழின் சுவை தன்னை நாமும் விருப்போடு
நல்லமுதாய் உண்பதற்கு நாடிவந்தோம் " நம்நாடு "

கட்டுரை, கவிதை, காரசாரவிமர்சனங்கள்
இத்தனை உள்ளடக்கி எப்போதும் தந்திடுவீர்.
எத்தனை பக்கமென்று எண்ணி நாம் பார்ப்பதில்லை,
எத்துணை" விஷயம்" என்றே எடைபோட முயன்றிடுவோம்

நம் "நாட்டுநடப்புகளை" நயமோடு தந்திட்டால்
நம் நாட்டு" நடப்பு" என்றும் நல்லதொரு பாதையிலே...
நடிப்புகளை போலிகளை நாமறிய உரைத்திடுவீர்
"நம்நாடு" உயர என்றும் நாமகள் துணையிருப்பாள்.

# இறைவனுக்கு

## எனது விண்ணப்பம்

நான் இப்பொழுது செய்யும் தொழிலை மிகவும் நேசிக்கி றேன். முழு மூச்சாக அத்தொழிலில் செயற்படுகிறேன். ஆனால் படிக்கும் காலத்திலிருந்து நான் விரும்பிய தொழில் கள் மூன்று. முதலாவது ஒரு சட்டத்தரணியாக வர வேண்டும் என்று விரும்பினேன். எனக்குநாற்பத்தைந்து வயது நடக்கும் போதுதான் சட்டத்துறைப் பரீட்சை ஒன்றினை எழுதிச் சில பாடங்களில் சித்தி பெற்றேன். அக்கல்வியைத் தொடர்ந்து கற்கக் கூடிய சூழ்நிலை பின்னர் எனக்குக் கிட்ட வில்லை. சட்டத்துறைக் கல்வி பெற்றிருந்த எனது உறவினர் சிலரின் செய்கைகளும் சிந்தனைகளும் எனக்கு மனச் சோர்வை யும் வெறுப்பையுமளித்ததுடன் சட்டக் கல்வி பற்றிய எனது ஆசைக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டன. பிற்காலத்தில் ஒரு ஆசிரிய நண்பர் குறிப்பிட்டதுபோல 'நான் சட்டத் துறைக் கல்வியைப் பூரணமாகப் பெறாதுவிட்டது நல்லதே' என்ற முடிவுக்கே நானும் வந்தேன். அதற்கான காரணங்களை மேலும் விபரிக்க விரும்பவில்லை.

என்னைக் கவர்ந்த இன்னொரு தொழில் தேவ ஊழியம் எனது 25ஆவது வயதிலேயே கிறிஸ்தவ போதகராக கல்வி கற்கும் வாய்ப்பு வந்தபோதும் ஏனோ அதனை அப்பொழுது நான் ஏற்கவில்லை. பின்னர் பல ஆண்டுகளுக்குப் பின்னர் கிறிஸ்தவ இறையியலை இரு ஆண்டுகள் கற்றேனாயினும் எனது சைவசமய விருப்பும், தமிழ்க்கலாச்சார புழக்க வழக்கங்க ளும் என்னை அவ்வாறு 'போதகராக' மாற அனுமதிக்க வில்லை!

மூன்றாவது துறைதான் இந்தப் பத்திரிகைத்துறை. எனது 16 வயதில் வந்த தமிழ்க்குரல் பத்திரிகையை இன்னும் பல நேயர்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள். அறுபதுகளில் வெளி வந்தவை சங்கப்பலகை மாதமிருமுறைப் பத்திரிகை. தற் பொழுது நம்நாடு வெளிவரும் அளவில் பிரசுரமான 'சங்கப் பலகை' பத்திரிகையின் அன்றைய விலை 15 சதம் மட்டுமே. ஏறக்குறைய இது ஒரு ஆண்டுகாலம் என்னால் பிரசுரிக்கப்பட் டது. அதனைத் தொடர்ந்து தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உத்தியோகபூர்வப் பத்திரிகையான 'தமிழன்' பத்திரிகையை அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் வேண்டுகோளுக்கு அமைய ஒரு ஆண்டுகாலம் நடத்தினேன். அந்தக் காலகட்டத்தில் பிரதாமான மாத சஞ்சிகைதான் நாவேந்தன் என்பதும் இதுவும் ஒரு ஆண்டுகாலம் நடந்து, பின்னர் நின்றுவிட்டது. ஐம்பதுகளில் ஆரம்பித்து எழுபதுவரை சிறுகதைகள், கட் டுரைகள், நாடகம், கவிதைகள் எனப்பல துறைகளிலும் எழுதி னேன். பின்னர் பத்திரிகை ஒன்றினைச் சொந்தமாக நடாத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்ததே தவிர முன்னர்போல

(4ஆம் பக்கம்பார்க்கவும்)

## நமது சிந்தனை என்ன?

(யாழ்ப்பாணம்)

நம்நாடு வாசகர்களினது அபிப்பிராயங்கள் தொடர்ந்து கிடைத்து வருவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்; அதே வேளையில் பாமரத்தன மான, உடனுக்குடன் செய்தி கிடைக்கவில்லையே என்று குறைப்படுபவர்களுக்காக நாமும் அனுதாபப்படுகிறோம்; நம்நாடு மிகக்குறுகிய கால கட்டத்துக்குள் மீண்டும் தின சரியாக மலர்வது உறுதி, இது வரை நாம் வாரம் மும்முறை யாக வெளிவருவதனை மாற்ற முடியாதுள்ளது, சூழ்நிலைக ளின் கட்டுப்பாடுகளுக்குள் நாம் முடங்கியுள்ளோம்; இதனை வாசகர்களும் விற்பனை யாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும். எமது பாணியை வேறு எந்தப் பத்திரிகையும் இதுவரை மேற்கொண்டது கிடையாது. குறிப்பாக அரசி யல் விமர்சனம், ஆசிரியத் தலையங்கம், இலக்கியச் செய்தி கள், விவாத அரங்கு என்பன எந்தத் தினசரிப் பத்திரிகை யும் எண்ணிப் பார்க்க முடியா தது. மிகச் சிறிய குழந்தைப் பருவத்திலுள்ள நம்நாடு இத னைச் சாதிப்பதனையுணர்ந்தா வது மக்கள் ஆதரவு மேலும் பெருக வேண்டும் என்று நாம் வினயத்துடன் வேண்டிநிற் கிறோம்!

## சிறிமாவோ-- ருக்மன் லடாய்?

(கொழும்பு)

ஜனாதிபதிவேட்பாளர் திருமதி சிறிமாவோ பண்டார நாயகா சுயேச்சை வேட்பா ளராகப் போட்டியிட முன் வர வேண்டும். அதனைவிடுத்து தமது கட்சியின் சின்னமான 'கை' சின்னத்தில் அவர் போட்டியிடுதலை நான் விரும்ப வில்லை. எதிரணிக்கு என்று தனியான பெயர், தனியான சின்னம் இருத்தல் வேண் டும், இதனை என்னைப் போலவே எதிரணியிலுள்ள ஏனைய கட்சிகளின் தலைவர் களும் வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு எக்ஸத் லங்கா மகாஜன பக்ஷய கட்சியின் பிரதம அமைப்பாளரான திரு, ருக்மன் சேனநாயகா அநுராத புரத்தில் நடைபெற்ற கூட்ட மொன்றில் பேசுகையில் வலி யுறுத்தியுள்ளார். காலஞ் சென்ற பிரதமர் சேனநாயகா வின் பெருமகன் இவர். இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது :-

சிறிமாவோ அம்மையார் மாணவர்களதும், ஏனையகட்சி களின் தலைவர்களதும் கருத்தை மதிக்காவிட்டால், சுயேச்சையாகப் போட்டியிடா விட்டால் எனது கட்சி அவ ருக்கு ஆதரவு அளிக்கமாட் டாது. நாம் முன்னணியிலி ருந்து ஒதுங்குதலைத் தவிர வேறு வழியில்லை,

# நம்நாடு

12-11-1988 சனிக்கிழமை


நடுநிலை பிறழாத ஏடு
நம்நாடு
படியுங்கள்

# நாடு எதிர்பார்ப்பது என்ன?

(கொழும்பு)

தென்னிலங்கையின் மாகாண முதலமைச்சர்கள் பதவிகளை இராஜிநாமாச் செய்கிறார்கள். மாகாணசபை உறுப்பினர்கள் இராஜிநாமச் செய்கிறார்கள். இவர்களது உறுப்பினர்கள் செய்துள்ள கொலைகள், அட்டகாசங்கள் குறித்துப் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. சட்டத்தரணி லியனு ராய்ச்சி முதல் பலர் கொல்லப்பட்டுள்ளனர். தேர்தல் ஆணையாளர் மீது, அவரைப் பதவிக்கு நியமித்த அரசின் அமைச்சர்களே பாராளுமன்றத்தில் குற்றஞ் சாட்டுகின்றனர்.

ஏழு கட்சிக் கூட்டு எதிரணியினருடன் மாண்புமிகு ஜனாதிபதி பேச்சுக்கள் நடத்துகிறார். ஜே.வி.பி தலைவர் ரோகண விஜய வீரவும் பகிரங்கமாகவே பத்திரிகைகளுக்குப் பேட்டியளிக்கிறார். ஜே.வி.பியின் ஹர்த்தால் தொடர்கிறது. பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை இது தொடரவும் கூடும். ஜனாதிபதி- சிறிமாவோ சந்திப்புக்களினால் எதுவும் நடக்கப் போவதில்லை என்ற நிலையும் தோற்றுகிறது. அவர்கள் பரஸ்பரம் அவநம்பிக்கை தெரிவித்துக் கடிதங்கள் பரிமாறுகின்றனர். துறைமுகத் தொழிலாளர்கள், பெற்றோலிய ஊழியர்கள் ஆகியோரின் கடமைகளை இராணுவத்தினரும், கடற்படையினரும் செய்கின்றனராம். இதற்குள் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். இடையிடையே தேர்தல் பிரசாரங்களும் நடக்கின்றன. தென்பகுதியில் கொலைகள் தொடர்கின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது வடக்கிலுஞ்சரி' தெற்கிலுஞ்சரி மக்கள் மிகவும் பயங்கரமான நிலையிலேயே வாழ்கின்றனர் என்பதும், நிரந்தரமான, அமைதியான, தெளிவான ஒரு இயல்பான வாழ்க்கை முறைக்கு ஏங்குகின்றனர் என்பதும் புலனாகின்றது. எனவே சகல அரசியல் தொடர்புள்ளவர்களும் மக்களுக்கு ஒரு அமைதியான வாழ்க்கை முறையை ஈட்டிக் கொடுக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகின்றனர்.

மக்களின் நலனைக் கவனத்தில் கொள்ளாத எச்செயலும் வரலாற்றின் பழிப்பினையே பரிசாகப் பெறும். தீர்க்கதரிசனமான பார்வை இன்றுள்ள சகல அரசியல் தரப்பினருக்கும் இன்றியமையாதது அரசாங்கமுஞ் சரி, அதற்கு எதிரானவர்களுஞ் சரி, மக்கள் நலத்தில் உண்மையான அக்கறை காட்டி உழைத்தல் வேண்டும். இன்று நாட்டின் பொருளாதாரம், கல்வி,. கலாச்சாரம் சமூக சௌஜன்யம் யாவும் நிலை குலைந்துள்ளன. இவற்றைப் பாதிப்புகளிலிருந்து விடுவித்து நாட்டின் பாரம்பரியச் சிறப்பை நிலை நாட்ட சகல அரசியல் சக்திகளும், சகல இன மக்களும் 'துவேசமற்ற நிலையில்' செயற்பட வேண்டியது அவசர அவசியமாகியுள்ளது. இதனையே இன்று நாடு எதிர் பார்க்கிறது.

## முதலாவது பிறந்த தினவாழ்த்து!

ஏழாலை வடக்கைச் சேர்ந்த
பேரின்பமூர்த்தி--பவளராணி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
செல்வன் டிபேந்திரா

இன்று 12. 11. 88 சனிக்கிழமை ஏழாலை வடக்கிலுள்ள தமது இல்லத்தில் முதலாவது பிறந்த தினத்தைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார், இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணன்மார், அக்காமார் அனைவரும் சகலகலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்!

## முதலீட்டுச் சந்தர்ப்பம்

நம்நாடு பத்திரிகையில் முதலீடு செய்யக்கூடியவர்களை நேரில் வருமாறு அழைக்கின்றோம். நல்ல எதிர்கால முண்டு. தமிழினத்தின் வாழ்விலும், வளத்திலும் ஆர்வமுள்ளவர்கள் முன் வருவார்களாக!

நிர்வாகி, நம்நாடு
192. கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

## நேரில் வருக!

- ★ தேர்ச்சியுள்ள கம்போசிட்டர்கள்
- ★ மெசின் மைன்டர்கள்
- ★ பக்கம் கட்டுவோர்
- ★ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள எழுத்தாளர்கள் (இருபாலாரும்)
- ★ மொழிபெயர்ப்பாளர் உடனே தேவை. சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

★

- ★ விளம்பரம் சேகரிப்பவர்கள்
- ★ பத்திரிகை விநியோகிக்கும் ஆட்கள்
- ★ பத்திரிகை உதவி ஆசிரியர்கள் (முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்) தேவை நேரில் வருக !

நிர்வாகி
நம்நாடு
192. கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

## ஊதாரிகளே வெளியேறிடுங்கள்

மாணவவாகனங்களுக்கு
கல்விச்சாலைகளில் ஒரு சில
தனியார்வழிகாட்டிகளின்
தன்னிச்சைச்சைகைகள்
தலை மீறிப் போய் விட்டன.
உத்தரவுப்பத்திரம்
பெறுதவர்களின் – ஏன்
இல்லாதவர்களின்
உண்மத்போக்குகள்
ஊமையான சமூதாயத்திற்கு
உரம்போடுகின்றன!
தட்டிக் கேட்டால்
சளப்பல்கள்
சங்கீதமாகி
சோபிக்கின்றன!
விவரம் புரியாத
கல்விச் செல்வங்களுக்குக் கூட
அருகதையற்ற – அந்த
அறுவடைக்காரர்களின்
அலம்பல்கள்
அமுதமாகின்றன!
உத்தமமாணவர்களை
மட்டும்நிற்க விட்டு
ஊதாரிகளே ! – நீங்கள்
எங்கள்நாளைய சந்ததியை
வாழவைப்பதற்காக
வேனும் இன்றே
வெளியேறிவிடுங்கள்
தமிழ்சமுதாயத்தின்
கல்விப்பயிர்
காத்திரமாய்ச் செழிக்கட்டும்

மாவை - வரோதயன்

## இறைவனுக்கு...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய பத்திரிகைகளுக்கு நிறைய எழுத வேண்டும் என்ற ஆசை போய்விட்டது. எப்பொழுதாவது, எதைப்பற்றியாவது விருப்பம் வரும்போது எழுதுவேன். ஆனால் இந்தப்பத்திரிகை ஆசைமட்டும் -----இன்றுவரைவிருட்சமாக என்னுள்வளர்ந்துநம்நாடு என்றபெயரில் மலர்ந்துள்ளது. எழுத்துலகம்,பத்திரிகையுலகத்தைப் போல்கடபநாடகப் பேர்வழிகள்,நடமாடும் உலகம் வேறு எதுவுமில்லையென்றே சொல்லலாம். எழுத்தாளனாகவோ, பத்திரிகையாளனாகவோ எவ்விதத் தகுதியும் தேவைப்படுவதில்லை என்ற நிலையே இங்கேயும், தமிழ்நாட்டிலும் நிலவுகிறது. இதனால் பக்காத்திருடர்கள், ஆள்மாறாட்டப் பேர்வழிகள் அயோக்கியர் எல்லாரும் பத்திரிகைத் தொழிலில் சரண்புகுந்துள்ள நிலையைப் பார்க்கிறோம். புளுகுவது மட்டுமே மூலதனமாகக்கொண்டு முன்னுக்கு வந்துள்ள புண்ணியவான்கள் சிலர் 'ஒரிஜினல்' எழுத்தாளர்களையே மட்டந்தட்டும் காலம் மலர்ந்துள்ளது.

பந்தம்பிடித்தல், காக்காபிடித்தல்தான் இவர்களுக்கு கைவந்தகலை. இதற்கு ஒத்துழைக்கத் தெரியாதவர்கள் எவ்வளவு திறமைசாலிகளானாலும் இருட்டடிப்புச் செய்வதில் இவர்கள் சாமர்த்தியசாலிகளாகச் செயற்பட்டு வருகிறார்கள் இந்தக் கூட்டத்திற்கு முன்னால் மகாகவி பாரதி பாரதியானாலுஞ் சரி, புதுமைப்பித்தன், வந்தாலுஞ் சரி மூக்குடைக்கத் தயங்கமாட்டார்கள். நம்நாடு பத்திரிகை இவ்விதமான களங்கம் எதையும் கொண்டிராது வேண்டியவர், வேண்டாதவர் என்ற பேதம் பாராது எழுதக்கூடிய அத்தனை பேருக்குமே களம் அமைத்துக் கொடுக்கும். எவ்வளவோ சிரமங்கள் மலிந்த இத்தொழிலில் மனதிற்கு இதந்தருவது. இது ஒன்றுதான். எப்படியும்] வாசகர்கள் கரங்களிலும், மனங்களிலும் நம்நாடு நிரந்தர இடம்பிடித்துக் கொள்ள வேண்டும். இதுவே இறைவனுக்கு நான் செய்யும் விண்ணப்பமாகும் !

'டமாரம்'

(தொடர்ச்சி)

## மாணவர்க்கு...

வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் கல்விப்பணிப்பாளர் திரு.சுந்தரலிங்கத்தை சந்தித்து பிரஸ்தாப வித்தியாசாலை எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இச் சந்திப்பில் வர்த்தக சங்க தலைவர் திரு. சிவசாமியும் கலந்து கொண்டார். பின்னர் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும் பிரபல சமூக சேவையாளருமான பொ.விநாயகமூர்த்தி நம் நாட்டிற்கு தகவல் தருகையில் பேச்சு வார்த்தை சுமுகமாக இருந்ததாகவும் பல கோரிக்கைகளை நிறைவேற்ற கல்விப் பணிப்பாளர் திரு.சுந்தரலிங்கம் முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# தமிழ்நாட்டில் அரசியல்நிலை மாற்றங்கள்!

## பாரதப்பிரதமர் வரலாறு படைக்கிறாரா?

தமிழ்நாட்டில் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியின் சமீபத்திய சுற்றுலாக்கள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதாக உள்ளன. பாடசாலைகள், தொழிலாளர்கள் கல்வி நிலையங்கள், மகளிர் அழைப்புகள். அரசியற் கருத்தரங்குகள் கிராமிய வளர்ச்சி மன்றங்கள் எனப் பல்வேறு மட்டங்களிலுமுள்ள பிரமுகர்களையும், சந்தர்ப்பங்களையும் அவர் தீவிரமாகப் பயன்படுத்துகின்றார்.

ஒரு காலகட்டத்தில் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். பின்பற்றிய பாணியையே பிரதமர் ராஜீவும் பின்பற்றுவதாகப் பல அரசியல் நோக்கர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

தி. மு. க. வில் எதிர்பார்க்கப்பட்ட எழுச்சி இன்னும் வரவில்லை என்று கருதப்படுகிறது. அ.தி.மு.க. ஜானகி அணியும் சிவாசிகணேசனின் தமிழக முன்னேற்ற முன்னணியும் தி.மு.க.வின் வழிகாட்டு தலையே எதிர்பார்த்துள்ளதாகத் தெரிகிறது.

இப்பத்திரிகை நம்நாடு இன்வெஸ்ற்மென்ற் புறொஜெக்ற் ஸ்தாபனத்தாரால் 192. கே கே. எஸ். வீதி. சுன்னாகத்திலுள்ள நம்நாடு அச்சகத்தில் 12-11-1988இச்சிட்டுவெளியிடப்பட்டது Namnaadu, 192, K. k. s. Road Chunnakam.